மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

Smart Fly
ARUN WINGS TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 0[illegible] | [illegible]: 148 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 11.02.2024 | பக்கங்கள் 11



# தேர்தல் இலக்கே ஜனாதிபதியின் அக்கிராசன உரை!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

பக்கம்-02

# அல்வாயின் அகள்விளக்கு கலாமணி! வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சம்!




பக்கம்-08

# தென்னிந்திய கலைஞர்களுக்கும் எமது மக்களுக்கும் ஏற்பட்ட ஏமாற்றம் வருத்தமளிக்கிறது!



பக்கம்-06

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!

# யாழ்ப்பாண மக்களுக்கு நன்றி தெரிவித்த பிரபல பாடகர் ஹரிஹரன்!



பக்கம்-07

# இந்து சமுத்திரத்தில் செல்வாக்கை இழக்கிறதா அமெரிக்கா : எச்சரிக்கிறார் ரணில்!





பக்கம்-03

ROLEX HOTEL
360, Galle Road,
Wellawatte,Colombo06.
Tel: 011 2360462

ROLEX HOTEL
340, Hospital Road, Jaffna.
Tel: 021 2222808
E-mail: rolex.hotel@yahoo.com

# தேர்தல் இலக்கே ஜனாதிபதியின் அக்கிராசன உரை!

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வின் கொள்கை விளக்க உரையானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் எதிர்கால தேர்தல் இலக்கு நோக்கியதாகவே அமைந்துள்ளது. உண்மையாக வார்த்தைகளால் சோடிக்கப்பட்ட உரையாகவும் பெரும்பாண்மை சிங்கள மக்களின் வாக்குகளை கவர்வதற்கான நோக்கிலும் அரசியல் தீர்வு விடையத்தை உச்சரித்தால் தேர்தல் இலக்கு பாதிக்கப்பட்டுவிடும் என்ற ஜனாதிபதியின் மனநிலையும் உரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வீழ்ந்து போன பொருளாதாரத்தை மீண்டெழச் செய்ய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இல்லாமல் சாத்தியம் இல்லை என்ற உண்மை தெரிந்தும் அதனை மறைத்து அரசியல் தீர்வு தொடர்பாக பேசினால் தென்னிலங்கையில் சலசலப்புக்கள் ஏற்பட்டு தனது வாக்கு வங்கியை சரித்து விடும் என்பதால் நடைமுறைச் சாத்தியமற்ற பொருளாதார வளர்ச்சி பற்றி உரையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட சகல தரப்பினரும் தேர்தலையே பிரதான இலக்காக கொண்டு தமது அறிக்கைகளை முன் வைத்து வருகின்றனர் அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் உரை ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்ததாகவே அமைந்துள்ளது.

# மட்டக்களப்பில் 40 பயனாளிகளுக்கு இறால் பண்ணைகளை வழுங்க தீர்மானம்

மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் காணப்படும் இறால் பண்ணைகளை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று(10.02.2024) காலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் பட்டிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு இடையிலாக ஒரு சங்கத்தினை கட்டி எழுப்ப வேண்டும் எனவும், இங்கு வழங்கப்படுகின்ற நிலத்தினை பயன்படுத்தி இறால் உற்பத்தியை செய்வதற்கு உரிய தொழில்நுட்ப ஆலொசனைகளை வழங்குவது தொடர்பாகவும், வழங்கப்படுகின்ற நிலங்களை பெற்றுக்கொண்டு இறால் உற்பத்தியை செய்யாமல் இருக்கக் கூடாது எனவும் உரிய முறையில் இறால் உற்பத்தியை மேற்கொண்டு பலன்களை அடைய வேண்டும் எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வருகின்ற வாரம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காணிகளை வழங்கும் விதமாக அந்த காணிகளை பகிர்ந்து அளிப்பதற்கும் நில அளவை திணைக்களத்தினால் அளவீடுகள் செய்து உரிய முறையில் பகிர்ந்து அளிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் சி.சுதாகர், கிழக்கு மாகாண கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சுதாகர், உதவி காணி ஆணையாளர் ஜனாப் கே.எல்.எம். முஸம்மில், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.





விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தானத்தில் ஆலயத்திற்கு பயன்தரக்கூடிய ஒரு தொகுதி மரக்கன்றுகள் நேற்று முன் தினம்(9) .மாலை 4.00 மணியளவில் நாட்டப்பட்டது.

காசி விநாயகர் ஆலய தொண்டர்களும்˙ தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை சிறுவர்களும் இணைந்து இம் மரநடுகை முன்னெடுக்கப்பட்டது.

தினசரி வெள்ளிக்கிழமைகளில் அறநெறி வகுப்புக்கள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் நிலையில் அதனுடன் இணைந்த வகையில் சமுகப் பற்றையும் ஏற்படுத்துமுகமாகவே இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது



# இந்து சமுத்திரத்தில் செல்வாக்கை இழக்கிறதா அமெரிக்கா : எச்சரிக்கிறார் ரணில்!

இஸ்ரேல் - பாலஸ்தீன யுத்தத்தில் அமெரிக்காவின் முடிவினால் இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு பாதிக்கப்படும் என அதிபர் ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிராந்தியத்தில் உள்ள இஸ்லாமிய நாடுகளின் எதிர்ப்பின் காரணமாக இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவினை ஏற்படுத்துவது பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சீன - ரஷ்ய ஈரானிய மூலோபாயங்கள் அமெரிக்காவின் ஆதிக்கத்தினை மிகச்சரியாக தாக்குகின்றன எனவும் அமெரிக்காவை மேலும் பலவீனமாக்குகின்றன எனவும் ரணில் கூறியுள்ளார்.

“இந்துசமுத்திரத்தில் ஸ்திரதன்மை நிலவ வேண்டும் என்றால் காசா யுத்தம் கூடிய விரைவில் முடிவிற்கு வரவேண்டும், அதன் பின்னர் ஐந்து வருடங்களிற்குள் சுதந்திர பலஸ்தீனம் உருவாக வேண்டும், இஸ்ரேலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.”என்றார்.

உக்ரைன் யுத்தமும் அதன் பின்னரான மேற்குலகின் தடைகளும் வளமிக்க செழிப்பான பொருளாதாரம் மற்றும், சீனாவிலும் மேற்கு இந்து சமுத்திரத்திலும் புதிய சந்தைகளை கண்டறிய உதவியுள்ளது.

உதாரணமாக ரஷ்யாவின் கச்சா எண்ணெய் வளைகுடாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களில் எண்ணெய் சுத்திகரிக்கப்படுகிறது.

டுபாய் தற்போது உலகின் மிகப்பெரும் கோடீஸ்வரர்களின் நிதிச்சந்தையாக மாறியுள்ளது, லண்டனைப் பின்தள்ளி அதன் இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

மேலும், ரஷ்யா ஈரானுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தியுள்ளது, ரஷ்யாவிற்கு ஆளில்லா விமானங்களை வழங்கும் முக்கிய நாடாக ஈரான் விளங்குகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில், ரஷ்யா, தென்னாபிரிக்கா, மியன்மார் போன்ற இந்து சமுத்திர நாடுகளுடன் கடல்சார் ஒத்திகைகளில் ஈடுபட்டுள்ளது எனவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சவுதிஅரேபியாவிற்கும் ஈரானிற்கும் இடையில் பிளவினை உருவாக்குவதில் சீனா முக்கிய பங்களிப்பையும் செய்துள்ளது, ஈரானும் அதன் சகாக்களும் தற்போது மேற்காசியாவில் முக்கியமானவர்களாக மாறியுள்ளனர்.” என ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சபாநாயகருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கும் இடையில் சந்திப்பு!



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கும் இடையில் சந்திபொன்று இடம்பெற்றுள்ளது.
இந்த சந்திப்பு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.
புதிய நாடாளுமன்ற கூட்டத் தொடரொன்று ஆரம்பிக்கப்படும் போது மேற்கொள்ளப்படும் நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இதன்போது கேட்டறிந்துக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையில் ஜனநாயகம், மனித உரிமைகள், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் தொடர்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இமயமலைப் பிரகடனத்தின் தேசிய உரையாடலுக்கான பயிலரங்குகள் ஆரம்பம்!





இமயமலைப் பிரகடனத்தின் அடிப்படையில் தேசிய உரையாடல் பயிற்சிப் பட்டறைகளுக்கான பயிலரங்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடக அறிக்கையில், நடைபெறவுள்ள உரையாடல்களை ஊக்குவிக்கும் நோக்கில், 150 சர்வமத குருமார்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களை ஒருங்கிணைப்பாளர்களாக பயிற்றுவிப்பதற்கான ஐந்து பயிலரங்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.

எனினும், முதலாவது பயிலரங்கு குருநாகலில் ஆரம்பமாகியுள்ளதோடு கண்டி, மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் வவுனியாவில் பயிலரங்குகள் இடம்பெறவுள்ளன.
இந்தப் பயிலரங்குகளின் பங்கேற்பாளர்கள் எதிர் வரும் மாதங்களில் நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும் உரையாடல்களை எளிதாக்குவதற்கான முக்கிய வளவாளர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த வகையில் குருநாகலில் நடைபெற்ற பயிலரங்குகளில் புத்தளம் மற்றும் அனுராதபுர மாவட்டங்களைச் சேர்ந்த பௌத்த, இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் உட்பட 30 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.
மேலும், சிறந்த இலங்கைக்கான சங்கத்திலிருந்து மாதம்பகம அசாஜி திஸ்ஸ தேரர், பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், கித்தலாகம ஹேமசார நாயக்க தேரர், சியம்பலகஸ்வெள விமலசார தேரர் மற்றும் உலகத்தமிழர் பேரவையின் சார்பில் அமெரிக்காவைச் சேர்ந்த எலியாஸ் ஜெயராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்நிலையில், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சங்கத்தின் சார்பில் விசாகா தர்மதாச மற்றும் அங்கத்தவர்களும் பங்கேற்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த உலகத்தமிழர் பேரவையின் சார்பில் கலந்து கொண்ட எலியாஸ் ஜெயராஜா "நாகர்கோட்டை உரையாடலின் தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்துரையாடல் போல இருந்தது. பெரும்பாலான பங்கேற்பாளர்களிடமிருந்து இமய மலை பிரகடனம் பற்றி மிகவும் சாதகமான கருத்துக்களைக் கேட்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, தேசிய உரையாடலில் மாவட்டம் தோறும் 5 சர்வமத தலைவர்களும் ஒரு சிவில் சமூக உறுப்பினருமாக மாவட்டத்திற்கு தலா 6 பேர் பிரதிநிதித்துவப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுநாயக்கவை கையகப்படுத்த காத்திருக்கும் இந்திய நிறுவனம்!






இலங்கையின் மூன்று விமான நிலையங்களின் நிர்வாகத்தை கையகப்படுத்துவது தொடர்பில் இந்தியாவின் அதானி குழுமம் கவனம் செலுத்தி யுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான பேச்சுக்கள் இலங்கை அரசாங் கத்தின் அதிகாரிகளுடன் முன்னெடுக்கப்பட்டுள் ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலை யம் ஆகியவற்றின் வசதிகளை விரிவுபடுத்து வதற்கும் பயணிகளின் திறனை அதிகரிப்பதற்கும் ஒரு தனியார் பங்காளியின் ஆதரவு எதிர்பார்க்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த மூன்று விமான நிலையங் களினதும் நிர்வாகத்தை கையகப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை அதானி குழுமம் இலங் கை அரசாங்கத்தின் அதிகாரிகளுடன் முன்னெ டுத்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கும் அதானி குழுமத்துக்கும் இடையில் விரைவில் மேற்கொள்ளப் படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கைக்கு சுமார் 1.48 மில்லி யனுக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் பயணம் செய்திருந்ததாக ஹரின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டி யுள்ளதோடு, அவர்களுக்கான வசதிகள் விமான நிலையங்களில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டு மெனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தனியார் பங்காளியாக அதானி குழுமம் குறித்த நடவடிக்கையை மேற்கொள்ள வுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் அதானி குழுமம் இதுவரை எந்தவொரு உத்தியோகப்பூர்வ அறிவிப்பையும் மேற்கொள்ள வில்லை.

இதேவேளை, மும்பை சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட இந்தியாவில் உள்ள 7 விமான நிலை யங்களின் நிர்வாகத்தை தற்போது அதானி குழுமம் நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மின் கட்டணம் தொடர்பில் அறிவிப்பு!

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் இம்மாத இறுதிக்குள் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மேலும் மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்குத் தேவையான பரிந்துரைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மீண்டும் முன்வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




விளம்பர தொடர்புகளுக்கு
+94 777 163990

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

# தென்னிந்திய கலைஞர்களுக்கும் எமது மக்களுக்கும் ஏற்பட்ட ஏமாற்றம் வருத்தமளிக்கிறது!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!



தென்னிந்தியப் பாடகர் ஹரிகரன் தலைமையில் இசைக் கலைஞர்கள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் வருத்தமளிப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டகள்ஸ் தேவானந்தா, இவ்வாறான சம்பவங்கள் எமது மக்களை தொடர்ந்தும் துன்பத்தில் அமுழ்த்தி குளிர்காய விரும்பும் சுயநலத் தரப்புக்களுக்கு வாய்ப்பாக மாறிவிடும் எனவும் வருத்தம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் தென்னிந்திய திரைப் பிரலங்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக கடற்றொழில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"“இவ்வாறான சம்பவங்கள் எமது பிரதேசங்களில் இடம்பெறுவது வேதனையளிக்கின்றது. எமது மக்களின் வாழ்வாதாரத்தினையும் வாழ்வியலையும் அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றுவதற்கு எமது புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்ற வேளையில், புலம்பெயர் முதலீட்டாளர் ஒருவரின் முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில், இவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படுவது, மக்கள் நலன் சார்ந்த எமது எதிர்பார்ப்புக்களுக்கு பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

எமது மக்களை தொடர்ந்தும் அவலங்களுக்குள் அமுழ்த்தி வைத்திருந்து, அதன்மூலம் அரசியல் இலாபமீட்ட முனைகின்ற சுயலாப தரப்புக்கள், எமது பிரதேசங்களில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் இல்லை என்ற கருத்தினை பரப்புவதில் கண்ணும் கருத்துமாக செயற்பபட்டு வருகின்றனர்.

அவ்வாறானவர்களின் கருத்துக்களை வலுப்படுத்துவதாக இவ்வாறான சம்பவங்கள் அமைந்து விடும். கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது, ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பிற்கும் அதிகமான மக்கள் வருகை தந்தமையும், ஒழுங்குபடுத்தலில் இருந்த குறைபாடுகள் சிலவுமே இந்த விரும்பத்தகாத சம்பவத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

இந்தச் சம்பவமானது, இசை நிழச்சியை கண்டுகளிக்கும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த எமது மக்களுக்கும், ஆர்வத்துடன் வருகைதந்த தென்னிந்திய கலைஞர்களுக்கும் அதேபோல் ஏற்பாட்டாளர்களுக்கும் ஏமாற்றத்தினை அளித்திருக்கின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றபோது, தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி செய்வதை ஏற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.” என்று தெரிவித் துள்ளார்.

# இந்தியாவுடனான உறவுகள்! ஜெய்சங்கரை சந்தித்த ரணில்!



இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இடம்பெறும் 7 ஆவது இந்து சமுத்திர மாநாட்டின் பக்க சந்திப்பாக நேற்று மாலை இருவருக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக அதிபர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, இந்தியாவுடனான இருதரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்து டன், இருதரப்பு உறவுகள் மற்றும் அதனை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக ஜெய்சங்கர் தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம்

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
+94 77 149 9094

# பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக நெல் அறுவடை!

பாடசாலை வரலாற்றில் முதல் முதலாக இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணியில் நெல் அறுவடை விழா இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி சமூகத்தினால் சுமார் முக்கால் ஏக்கரில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலை வரலாற்றில் முதற்தடவையாக நெல் அறுவடை விழாவானது பாடசாலை முதல்வர் சபரி பூலோகராஜா தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் உதவிக்கல்விப் பணிப்பாளர் நளாயினி வசந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

குறித்த பாடசாலைக் காணி கடந்த வருடம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது. தரிசு நிலமாக காணப்பட்ட குறித்த காணியில் நெற்செய்கை மேற்கொண்டு இன்று அறுவடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த செயற்பாடு தொடர்பில் அப்பாடசாலை சமூகத்தினருக்கு பலரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். இவ்வாறு பாடசாலைகள், அரச நிறுவனங்கள் உள் ளிட்ட பல நிறுவனங்களில் தரிசு நிலங்களாக காணப் படும் நிலையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி சமூகத் தின் செயற்பாடு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.









# யாழ்ப்பாண மக்களுக்கு நன்றி தெரிவித்த பிரபல பாடகர் ஹரிஹரன்!

யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாபெரும் இசை நிகழ்வில் ஏற்பட்ட குழப்ப நிலையால் நிகழ்வு தடைப்பட்டது.

முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரபல பாடகர் ஹரிஹரன் உட்பட பல சினிமா பிரபலங்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து கொண்ட நிலையில், இடைநடுவில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற அசம்பாதவிதம் குறித்து பாடகர் ஹரிஹரன் தனது சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

“மறக்க முடியாத இசை நிகழ்ச்சிக்கு நன்றி யாழ்ப்பாணம். உங்கள் அதீத அன்பும் ஆதரவும் இசையின் ஒருங்கிணைக்கும் சக்தியை வெளிப்படுத்தியது. நாங்கள் நல்லிணக்கத்தையும் இணைப்பையும் ஒன்றாக, இணைந்து கொண்டாடினோம். இந்த நிகழ்வை ஒழுங்கமைப்பதில் அபார முயற்சி செய்தவர்களுக்கு சிறப்பு நன்றி. ஒவ்வொரு நொடிக்கும் நன்றியுடையவனாக இருக்கின்றேன்” என அவர் பதிவிட்டுள்ளார்.



# அல்வாயின் அகள்விளக்கு கலாமணி! வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சம்!!

வடமராட்சியில் கடந்த 1987 “ஒப்பரேஷன் லிபரேஷன்’ போது நடந்தேறிய கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் முதலாவதாக ஆண்டு நினைவு கூர்வாகக் கொண்டு வெளியாகும் “கல்லறை மேலான காற்று”கவிதைத்தொகுதிக்கு முன்னுரை ஒன்று அவசியம்தானா என்பது இன்னமும் வினாவாகவே என்னிடம் உள்ளது என ஆசான் கலாமணியின் வார்த்தைகள் இன்னமும் என் மன நினைவுகளில் பதிந்துள்ளது.

இப்படித் தான் எங்கள் இலக்கிய நட்பு முகிழ்ந்தது. காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1988 போர்க் காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பே “கல்லறை மேலான காற்று” எனும் கவிதை தொகுப்பாகும்.

வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் கொடூர நினைவுகளின் அழியாத, அனல் வீசும் கவிதை தொகுப்பை ஈரோசின்மாணவர் இளைஞர் பொது மன்றத்தால் (GUYS) 1988 இல் வெளியிடப்பட்டது.

இந்நூலின் முன்னுரையில் ‘விமர்சனமாக அமையக் கூடாதென்பதனால் கவிதைகள் பற்றி தனித் தனியாகவே கருத்துக்கூறுதல் பொருத்தமன்று எனினும் இக்கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டும் பொதுப்பண்பைத் தம்மகத்தே எனக்கூறுதல் சாலப் பொருந்தும். வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் இதற்கு ஓர் இடமுண்டு’ என எழுதியுள்ளார் ஆசான் கலாமணி.

வடமராட்சி “ஒப்பரேஷன் லிபரேஷன்” ஓராண்டு நினைவுக் கவிதைகளை படைத்த இளங் கவிஞர்களின் படைப்பான “கல்லறை மேலான காற்று” எனும் கவிதை தொகுப்பாக்கு ‘அல்வைக் கலா’ எனும் எங்கள் பேராசான் கலாநிதி த. கலாமணி 31-05-1988 இல் எழுதிய முன்னுரையாகும்.

அண்மையில் கலாமணியின் மைந்தன் பரணீதரனுடன் ஆசானின் முன்னுரைகளை தொகுத்து நூலாக்க வேண்டும் என கலந்துரையாடினோம். அவர் வாழும் போதே நூலாக்க வேண்டும் என




ஐங்கரன் விக்கினேஸ்வரா




முயன்றோம். எனினும் அவருக்கு சமர்ப்பணமாக அந்நூல் விரைவில் வெளிவரும்.

## கல்வியியல் துறை ஆசான்:

யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை ஆசானாகிய கலாநிதி தம்பிஐயா கலாமணி (1952.02.04) யாழ்ப்பாணம், அல்வாயைச் சேர்ந்த பிரபல்யமான நாடகக் கலைஞரும் ஆவார். பேராதனைப் பல்கலைக்கழக பௌதீகவியற் பட்டதாரியன இவர், இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவர். தனது தந்தையிடம் நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற பல துறைகளையும் கற்றுக் கலைப்பணி ஆற்றி வந்துள்ளார்.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு “நாட்கள் , கணங்கள் நமது வாழ்க்கை“ என்பதாகும். இவர் “ஒப்பிலாமணியே“ என்ற குறும்படத்தையும் நடித்துள்ளார். 1974 முதல் சிறுகதை எழுத ஆரம்பித்து 35 ஆண்டுகளில் 30 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியற் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

வடமராட்சியின் மூத்த விருட்சமாக என்றும் விளங்கும் கலாமணி ஆசான் படைத்த படைப்புக்கள் பல. அவற்றுள் அம்மாவின் உலகம், இலக்கியமும் உளவியலும், இளையோர் இசை நாடகம், ஏனிந்தத் தேவாசுர யுத்தம், காலநதியின் கற்குழிவு, ஜீவநதி நேர்காணல்கள் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

அல்வாய் மண்ணின் அகள்விளக்காக ஒளிவீசிய ஆசான் கலாமணியின் திரு ஊஞ்சல்- கொற்றாவத்தை சிறப்பாவளை அவதாரக் கண்ணன் ஸ்ரீ ரமணன் திருவுடையாள்: பிரதேசமலர் 2011, நதியில் விளையாடி, நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கைகள்,பாட்டுத் திறத்தாலே, புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும், பௌதிக விஞ்ஞானக் கலைச்சொற்கள், மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல், வடமராட்சி வலயக்கல்விச் சமூகம் முன்னெடுக்கும் ஆசிரியர் மகாநாடு 2016 ஆகியன இவரது மண் வாசம் வீசும் நூல்களாகும்.

## அல்வாயின் அகள்விளக்கு:

மனோகரா நாடகசபாவின் இயக்குனரான இவர், வாலிவதை, சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, ரீவள்ளி, கோவலன் கண்ணகி, பூதத்தம்பி, பாஞ்சாலி

தொடர்ச்சி 09 பக்கம்

# அல்வாயின் அகள்விளக்கு கலாமணி! வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சம்!!

சபதம் நாடகங்களில் நடித்துள்ளார். இவரது எனது நாட்களின் கணங்கள் நமது வாழ்க்கைகள் சிறுகதை நூலுக்கு, வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் சிறந்த நூலுக்கான விருது 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மண்வாசனை வீசும் எழுத்தை தன் உயிராக நேசித்த அல்வாயின் அகள்விளக்கு கலாமணி நேற்று (2024பெப்ரவரி 9) நள்ளிரவில் விண்ணேவிய தகவல் மனதை நெருடியது. வடமராட்சியில் முகிழ்ந்த பெருவிருட்சமான கலாமணி ஆசான் என்றும் புதிய தலைமுறைகளுக்கான வழிகாட்டியாய் இருப்பார்.

# வெளிநாட்டு முதலீடுகள்: ஜே.வி.பியின் நிலைப்பாடு!





இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரும் வெளிநாட்டவர்களை எதிர்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி எதிர்க்காது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அந்த கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கான உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த நிலையிலேயே, நேற்று (10) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளின் விமர்சனங்களுக்கு மத்தியில், அனுரகுமார திஸாநாயக்க மற்றும் அவரது குழுவினர், இந்தியாவுக்கான பயணத்தை நிறைவு செய்து இன்று நாடு திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில், அவரது இந்தியாவுக்கான பயணம் பாராட்டத்தக்கது என கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எனினும், அனுரகுமாரவின் இந்தியாவுக்கான பயணம் மற்றும் அவரது சந்திப்புக்கள் குறித்து, அவரது கட்சியின் தொழிற்சங்கம் அதிருப்தி வெளியிடும் என கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் அரசியல்வாதிகள் இந்தியாவுக்கு பயணங்களை மேற்கொள்வது சாதாரணமான ஒன்று எனவும், மாதாந்தம் பலர் இவ்வாறான தனிப்பட்ட மற்றும் உத்தியோகப்பூர்வ பயணங்களை இந்தியாவுக்கு மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


# உடனடி வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும்
தேசியம் வாராந்த பத்திரிகையை
விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:
077 716 3990-076 567 3339

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

**2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.**

**2 பரப்பு - 5,50,000/=**

**20 அடி பாதையுடன்.**

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME